## எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேவிஸஸ் (ஸ்ரீ லங்கா) (பிறைவேட்) லிமிட்டட் - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேவிஸஸ் (ஸ்ரீ லங்கா) (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயங்களை வலியுறுத்துதல்

(அ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களை மூலதனச் செலவினங்களுக்கான அரசாங்க மானியம் (வாக்களிக்கப்பட்ட நிதி) மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட வருமான நிதியத்துடன் இணைப்பதற்கான அடிப்படையை விளக்கும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1.1 மீது நான் கவனத்தை ஈர்க்கின்றேன். 2005 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், திறைசேரியின் செயலாளர் 2006 பெப்ரவரி 09 இல் தனது கடித இல. பிஈ/ஜீஓசீஓ/1/1 மூலம் தற்போது அரசாங்கத்திற்கு சொந்தமான விமான நிலையத்தின் காணி மற்றும் கட்டிடம் மற்றும் கம்பனி வைத்திருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கும் முன்னர் இலங்கை அரசாங்கத்தால் சேவையாற்றப்பட்ட விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான பொறுப்புக்களை கையேற்பதற்கும், தேறிய சொத்து பெறுமதிக்கான பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கும் கம்பனிக்கு கட்டளையிட்டிருந்தார்.

மேலும், மேற்படி அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவது தொடர்பான கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில், சட்டமா அதிபர் தனது 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் புதிய அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்தார். தற்போது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான முறையே விமான நிலையத்தின் (கள்)

நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் மாற்றுவது இதில் உள்ளடங்குகின்றன. எனினும் நாளதுவரை புதிய அமைச்சரவை தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனியால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை சட்டத்தின் கீழ், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம், அமைச்சர் கட்டுநாயக்கா விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம், இரத்மலானையிலுள்ள சிவில் விமானப் போக்குவரத்து பயிற்சி நிலையத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள், அத்திடியவில் உள்ள வானூர்தி தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம், கம்பஹா மற்றும் பமுனுகமவில் உள்ள வானொலி வழிசெலுத்தல் உதவி, பீதுருதாலகலவில் உள்ள ரேடார் (Radar) நிலையம், நுவரெலியாவில் உள்ள விடுமுறை பங்களா மற்றும் 0.125 ஹெக்டெயர் அனுராதபுர காணி என்பவற்றை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு உரிமையாக்கி மாற்றியிருந்தார். எனவே, கம்பனி பயன்படுத்திய காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமைத்துவம் கணக்காய்வின் போது சந்தேகத்திற்குரியதாக இருந்தது. எனினும், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் கட்டிடங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், நாளதுவரை மதிப்பீட்டை பூர்த்தி செய்து இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட இலங்கை வெளிநாட்டு கடன் சேவை தொடர்பான இடைக்காலக் கொள்கை'' என்ற தலைப்பின் கீழ் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதிய விசேட கடிதத்தின் பிரகாரம் கட்டம் 2 செயற்திட்டத்தின் நிர்மாணத்தின் முடிவுறுத்தல் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மூலப்பொருள் தற்செயல்களை விளக்குகின்ற குறிப்பு இல. 29 மீது நான் கவனத்தை ஈர்க்கிறேன்.

மேற்படி தீர்மானத்தின் பிரகாரம் கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் தொடர்பாக நிதி அமைச்சிடம் இருந்து ஒப்புதல் சமர்ப்பிக்கப்படாததால், நிர்மாண நிறுவனம் இந்த செயற்திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியது. எனவே, நிர்மாண நிறுவனத்திற்கான தாமதக் கட்டணம், மேலதிக களஞ்சிய கட்டணங்களுடன் கட்டளையிடப்பட்ட பொறி மற்றும் மூலப்பொருட்களின் கிரயம், வேலைகளைப் பராமரிப்பதற்கான கிரயம் (பாதுகாப்பு, செயற்பாடு, சுற்றாடல்), வேலைத்தளத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலையை பராமரிப்பதற்கான கிரயம் உட்பட நிலுவைக் கொடுப்பனவுகள், பொருள் சிதைவடைவதால் ஏற்படும் நட்டம், தற்காலிக வேலைகளின் தளர்த்தல் மற்றும் நிலையான வாடகையின் கிரயம், நிர்மாண உபகரணங்கள், பணிபுரியும் ஒப்பந்த பதவியணியினர் மற்றும் தொழிலாளர்களைத் திருப்பி அனுப்புவதற்கான கிரயம், இடைநிறுத்துதல் மற்றும் முடிவுறுத்துதலிற்கு வெளியே ஏற்படும் ஏதேனும் ஏனைய ஒப்பந்ததாரர்களின் உரிமைக் கோரிக்கைகள், முக்கிய ஒப்பந்ததாரரால் திரும்பப் பெறப்படும் ரீசீ இன் உப ஒப்பந்ததாரர்கள் மூலமான சாத்தியமான வழக்குக் கட்டணங்கள், தொழில்தருநரிற்கான வருமான இழப்பு, கடன் பயன்பாட்டு சிக்கல் போன்ற கடுமையான நிதிப் பாதிப்புக்கள் கம்பனிக்கு ஏற்படும்.

ஐபிஏ 16-20 இன் பிரகாரம் இடைநிறுத்துவதற்கு வெளியே எழும் ஒப்பந்ததாரரின் உரிமைகோரல்களின் மொத்தத் தொகை ரூபா 15,729,888,690 (ஜப்பான் யென் 6,352,071,405) ஆக மாற்றப்பட்டது, அவை ஆலோசகரின் மதிப்பாய்வின் கீழ் உள்ளதுடன் 2022 திசெம்பர் 09 முதல் நடைமுறைக்கு வரும் முடிவுறுத்தல் காரணமாக சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்தன. எனினும், ஒப்பந்ததாரர் இடைநிறுத்தல் உரிமைகோரல்கள் உட்பட முடிவுறுத்தல் உரிமைகோரலை (இறுதி உரிமைகோரல்) இன்னும் சமர்ப்பித்திருக்கவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கம்பனியின் ஆளுகை சபையால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகளை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

### 1.5 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பொருள் உருப்படியும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்பட வேண்டும். எனினும், மேலதிக நேரம் மற்றும் மிகையூதியத்திற்காக செலுத்தப்பட்ட முறையே ரூபா 536 மில்லியன் மற்றும் ரூபா 358 மில்லியன் தொகை தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை. | மிகையூதியம் மற்றும் மேலதிகநேரம் உள்ளிட்ட பதவியணியினரிற்கு செலுத்தப்பட்ட ஆளணியினர் செலவினங்களுக்குள் பல உருப்படிகள் உள்ளன. கம்பனி முக்கியமாக ஈபிஎவ், ஈரீஎவ், பணிக்கொடை, பணிப்பாளர் ஊதியம் போன்ற நியதிச்சட்ட செலவின வகைகளை குறிப்பு எண் 07 இன் கீழ் வெளிப்படுத்துகிறதுடன் 25 வகைகளைச் சுற்றியுள்ள ஏனைய பதவியணியினர் தொடர்பான அனைத்துச் செலவுகளும் பொதுவாக ‘‘பதவியணியினர் கிரயங்கள்’’ என வெளிப்படுத்தப்படுகின்றன. | நிதிக்கூற்றுக்களில் பொருள் உருப்படிகளை தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு சொத்தின் இற்றை பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் என்பன வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்புக்கள் முந்தைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், மாற்றம் இலங்கை கணக்கீட்டு நியம இல. 8 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7 வகைகளிற்குரிய ரூபா 28,580 மில்லியன் கொண்டுசெல்லும் பெறுமதியுடைய சொத்துக்கள் நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஐந்து சர்வதேச விமான நிலையங்கள் மற்றும் தொடர்புடைய இடங்களிலுமுள்ள மொத்த சொத்துக்களைக் கருத்தில் கொண்டு, கணக்கீட்டு நியமத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு சொத்தின் வருடாந்த மதிப்பாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வது மிகவும் நடைமுறைச் சாத்தியமற்றது. எனினும், இந்த விடயத்தை நிவர்த்தி செய்வதற்கு, கம்பனி ஏற்கனவே அனைத்து நிலையான சொத்துக்களிலும் வகை வாரியாக மீள்மதிப்பீட்டு செயன்முறையை தொடங்கியுள்ளது. இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, பீஐஏ கட்டிடங்களின் மதிப்பீடு ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இற்றைப் பெறுமதிகள் மற்றும் பயன்தரு ஆயுட்காலங்கள் திருத்தப்பட்டு, முழுமையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள நிலையான சொத்துக்கள் மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு செயன்முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் (ஏஎம்சீ) நெருக்கமான மேற்பார்வையின் கீழ் நடைபெற்று | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இற்கு இணங்க முகாமைத்துவம் நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வருகிறது. | | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 5,011 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியுடைய நான்கு (4) செயற்திட்டங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. எனினும், இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 55வது பத்தியின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்விடப்படுவதற்கு பதிலாக செயற்திட்டங்களின் கிரயமானது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைவேலையாக காட்டப்பட்டிருந்தது. | | ஏற்றுமிடம் மற்றும் கிழக்கு நடையோடுபாதையின் (Apron and East Taxiway) புனரமைப்பு – ஆர்எம்ஏ | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இறுதி செய்யப்பட்ட விலை மாற்றங்கள் உட்பட வேறுபாடுகள் 2023 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் சொத்துக்களின் கட்டுப்பாடு, ஆபத்து மற்றும் நன்மைகள் கம்பனிக்கு மாற்றப்படும் போது, அவற்றை நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (அ) | சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் - அத்திடிய | 2023 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்படும். | |
| | | (ஆ) | சுகாதார அலுவலகத்தில் முன்மொழியப்பட்ட கொள்கலன் மற்றும் பதவியணியினர் மலசலகூடங்கள்- ஆர்எம்ஏ | -மேற்படி- | |
| | | (இ) | ரிமோட் ஏற்றுமிடம் மற்றும் நடையோடுபாதை - பீஜஏடிபி பொதி பீ | ஒப்பந்ததாரரின் வேறுபாடுகள் மற்றும் உரிமைகோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், அதற்கு கணிசமான நேரம் எடுத்தது, தற்போது அது இறுதி கட்டத்தில் உள்ளது. | |
| (ஈ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 07 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்களுக்கான பிணையாக உறுதியளிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை நிதிக்கூற்றுக்களில் | எல்சீ இற்கு எதிராக உறுதியளிக்கப்பட்ட எஃப்டி சான்றிதழ் தொடர்பாக குறிப்பு வெளிப்படுத்தப்படும். | | | பொறுப்புக்களுக்கான பிணையாக உறுதியளிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், ரூபா 5000 மில்லியன் வரையிலான கடன் வசதி கடிதத்திற்காக பிணையாக வைக்கப்பட்டிருந்த ரூபா 400 மில்லியன் தொகையான நிலையான வைப்பு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2.1.4 இன் பிரகாரம் முதலீட்டு சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. எனினும், கம்பனியால் வாடகைக்கு விடப்பட்ட செயற்பாட்டுக் கட்டிடத்திற்குள் அமைந்துள்ள 299 இடங்கள் முதலீட்டுச் சொத்துகளாக இனங்காணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | முதலீட்டு சொத்துக்களை தனித்தனியாக இனங்காணும் செயன்முறை ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயன்முறையாகும், இது பல நடைமுறை தாக்கங்களைக் கொண்டுள்ளதுடன் இது எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கவனிக்கப்படும். | கணக்கீட்டு நியமம் மற்றும் கொள்கையின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதி ஏ - பயணிகள் முனையக் கட்டிடம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளின் கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் பெறுபவர் மொத்த பயன்படுத்தப்படாத மிகுதி தொகையில் வருடமொன்றிற்கு ஒரு உத்தேச சதவீதம் (0.1%) என்ற விகிதத்தில் அரையாண்டு ரீதியாக ஜேஐசீஏ இற்கு கடப்பாட்டுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். செயற்திட்டப் பணி இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினங்கள் (உதாரணம், சம்பளம், பாதுகாப்பு செலவினங்கள், துப்பரவு சேவைகள் போன்றன) ரூபா 68,980,863 ஆகும். கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினங்கள் சிக்கனமற்றதாக | கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் பெறும் செலவின் ஒரு பகுதியாகும். தகுதிபெறும் சொத்து தொடர்பான கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்காக ஒரு நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும் கடன் பெறும் கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன. நிர்மாணத்தின் போது வட்டியும் மூலதனமாக்கப்படுவதால், இந்த செயற்திட்டத்திற்காக குறிப்பாக ஜேஐசீஏ ஆல் கடன் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருப்பதால், நிர்மாணத்தின் போது ஏற்படும் கடப்பாட்டுக் கட்டணங்களும் மூலதனமாக்கப்பட வேண்டும் என நாங்கள் நம்புகிறோம். | செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியின் போது ஏற்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினங்கள் விரிவான வருமான கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தாலும், அவை விரிவான வருமானக் கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எனினும், இது நடைமுறை வேலையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் மற்றும் நடைமுறைவேலை அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | ஆலோசனை சேவைகள் உடன்படிக்கையின் 6.2 (ஆ) மற்றும் (இ) பொது நிபந்தனையின் பிரகாரம் ஆளணியினருக்கான கொடுப்பனவு அத்தகைய ஆளணியினரால் சேவைகளின் செயலாற்றலில் உண்மையாக செலவிடப்பட்ட காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் சேவைகளின் செயலாற்றலில் ஆலோசகரினால் உண்மையாகவும் நியாயமாகவும் மீள்நிரப்புச்செய்யக்கூடிய செலவினங்கள் ஆலோசகரிற்கான வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், வாடிக்கையாளர் மூலம் ஆலோசகருக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிநாட்டுப் பகுதி தொடர்பாக யென் 120,891,450 மற்றும் உள்ளூர் பகுதி தொடர்பாக ரூபா 147,259,653 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நடைமுறைவேலை மற்றும் ஆலோசகர் செலுத்த வேண்டிய கணக்குகள் அதே தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | <u>வெளிநாட்டு கொடுப்பனவுகள்:</u><br>விலைப்பட்டியல் இல. எவ் 34 – எவ் 39 என்பன பிஎம்யூ இற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் ஜேஐசீஏ இற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் கடன் இடைநிறுத்தப்பட்ட பின்னர் மேலும் கொடுப்பனவுகளை ஜேஐசீஏ ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.<br><u>உள்ளூர் கொடுப்பனவுகள்:</u><br>விலைப்பட்டியல் இல. எல் 34 – எல் 46 என்பன பிஎம்யூ இற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் ஜேஐசீஏ இற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் மேலும் கொடுப்பனவுகளை ஜேஐசீஏ ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. | ஆலோசனை சேவை உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் முறையாக அங்கீகாரம் அளித்த பின்னர் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட 2022 ஏப்ரல் 12 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெறப்பட்ட ரூபா 4,278 மில்லியன் தொகையான மூன்று வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை நிறுத்தியது. செலுத்த வேண்டிய எந்தத் தொகையையும் அதன் நிலுவைத் திகதியில் கடன்பெறுபவர் செலுத்தத் தவறினால், கடன் உடன்படிக்கைகளில் | இணங்கப்பட்டது. அதற்கேற்ப தவணைகடந்த வட்டியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனுக்கான தவணைகடந்த வட்டி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் நிலுவைத் திகதியிலிருந்து உண்மையான கொடுப்பனவு திகதி வரை காலாவதியான தொகைக்கு வட்டி செலுத்தப்பட வேண்டும். எனினும், மேற்படி மூன்று கடன்களின் தவணை கடந்த வட்டிக்கு எந்தவொரு ஏற்பாடும் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் தரையிறங்கி நிறுத்துதல் மற்றும் விமான பாலக் கட்டணங்கள் மற்றும் வாடகை மற்றும் ஏனைய கட்டணங்கள் மீதான தவணை கடந்த வட்டிகள் தொடர்பான நிலுவைக் கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,541.8 மில்லியன் தொகையாக இருந்தது, இது ஒரு வருடத்திற்கும் மேலாக உள்ளது. மேலும், இந்த அறிக்கைத் திகதி வரை கடன்பட்டோர் மீதி ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த மொத்த மீதியானது ”தவணைகடந்த வட்டிகளை” மாத்திரமே உள்ளடக்குகின்றதுடன் ஏஏஎஸ்எல் முறையான தீர்ப்பனவுகளை கோரி அவ்வப்போது ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸிற்கு கொடுப்பனவு நினைவூட்டல்களை மீண்டும் மீண்டும் அனுப்பியிருந்ததுடன் நாளதுவரை எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் உள்ளடங்கிய அவை அனைத்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2023 மார்ச் 29 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம், இந்த நிலுவை மீதியை பதிவழிப்பது தொடர்பாக தீர்மானமொன்றை எடுப்பதற்கு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் தனது அதிகாரத்தை அமல்ப்படுத்துவதில் தங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 மே 30 இல் நடைபெறும் பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு இந்த விடயம் பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படும். 2023.03.31 ஆம் திகதிய கடிதம் | தவணை கடந்த தொகைகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| | மூலம் 2022.12.31 இல் உள்ளவாறு தங்கள் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துமாறு ஏஎஸ்எல் ஸ்ரீ லங்கன் எயார்லைனைக் கோரியது. எனினும், மின்னஞ்சல் நினைவூட்டல் ஸ்ரீ லங்கன் எயார்லைனுக்கும் அனுப்பப்பட்ட போதிலும், உறுதிப்படுத்தல் ஏஎஸ்எல் ஆல் பெறப்பட்டிருக்கவில்லை. | |

### 1.7.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணங்களாக கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 193 மில்லியன் தொகையானது உரிய கடன்பட்டோரிற்கு எதிராக மீளச் செலுத்தாமலோ அல்லது எதிரீடு செய்யாமலோ மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்து. மேலும், கடன் மீதிகளின் தனியான வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவை வாடிக்கையாளர்களின் மேலதிகக் கொடுப்பனவாகும். மேலும் இந்த மீதிகள் எதிர்கால விலைப்பட்டியல்களுக்கு எதிராக எதிரீடு செய்யப்படும். கொடுப்பனவுகளுடன் சேர்த்து பணம் அனுப்பும் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளோம். அவர்கள் தொடர்புடைய விபரங்களைச் சமர்ப்பித்தவுடன், செலவு மற்றும் வரவு மீதிகளை எதிரீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். கடன் மீதிகளுக்கான தனியான வயதுப் பகுப்பாய்வை உருவாக்க முடியாது. மேலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வில் இவையும் சேர்க்கப்பட்டுள்ளன.<br>வாடிக்கையாளரின் மீதிகள் தேறிய மேலதிகக் கொடுப்பனவுகளை பிரதிபலிக்கின்றன. | முற்கொடுப்பனவு மீதிகளை கண்டறிந்து உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7.3 முற்பணங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து பிரிவுகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்களால் பெறப்பட்ட வழங்குநர் முற்பணங்கள் உரிய ஆண்டு இறுதிக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் பல்வேறு பிரிவுகளால் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டுகளிலும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 100 | இணங்கப்பட்டது - நீண்டகாலமாக நிலுவையாக உள்ள வழங்குநர் முற்பணங்களை சரியான நேரத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு அனைத்து எச்ஓடி இற்கும் வழக்கமான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டதுடன் அவர்கள் கொவிட் தாக்கம் மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக திருப்திகரமாக தீர்ப்பனவுகளை மேற்கொள்வதற்கு அவை பயன்படுத்தப்பட்டன. ஆனால் 2021 இற்குப் பின்னர், இறக்குமதி கட்டுப்பாடுகளுடன் சந்தையில் | வழங்குநர் முற்பணங்கள் கொள்வனவு பூர்த்தியடைந்த பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் கூட்டுமொத்தமான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தேவையான பொருட்கள் கிடைக்காததாலும், சந்தையில் கிடைக்கும் பொருட்களுக்கு அதிக விலை இருப்பதாலும் நடைமுறையில் இதைச் செய்ய முடியவில்லை. இதற்கு மேலதிகமாக, புதிதாக அமுல்ப்படுத்தப்பட்ட ஈஆர்பி முறைமை சிக்கல்களும் உரிய நேரத்திலான தீர்ப்பனவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | |
| (ஆ) கம்பனியால் அறிமுகப்படுத்தப்பட்ட காசு முற்பணத்தின் நடைமுறைகளின் பிரகாரம் இந்த நோக்கத்திற்காக பெறப்பட்ட முற்பணம் பத்து (10) வேலை நாட்களுக்குள் பயனரால் செலுத்தப்பட வேண்டும். எனினும், பீஜஏ இற்கு வழங்கப்பட்ட ரூபா 3,614,429, ஆர்எம்ஏ இற்கு வழங்கப்பட்ட ரூபா 610,715, ஜேஜஏ இற்கு வழங்கப்பட்ட ரூபா 450,248, மத்தலவிற்கு (ஜனவரி 31 இல் உள்ளவாறு) வழங்கப்பட்ட ரூபா 2,207,760 என்பன 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. காசு முற்பணங்களின் வயதுப் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.<br><br>தீர்ப்பனவு செய்யப்படாத காலப்பகுதி — தொகை (ரூபா)<br>365 நாட்களுக்கு மேற்பட்டது — 162,937<br>365 நாட்களுக்கு குறைவானதும் 180 நாட்களுக்கு மேற்பட்டதும் — 487,020<br>180 நாட்களுக்கு குறைவானதும் 10 நாட்களுக்கு மேற்பட்டதும் — 4,910,580<br>10 நாட்களுக்கு குறைவானது — 1,406,216 | நீண்டகால நிலுவையாக உள்ள காசு முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக வழக்கமான நினைவூட்டல்கள் அனைத்து எச்ஓடி இற்கும் அனுப்பப்பட்டன, மேலும் பொதுவாக அவர்கள் தீர்ப்பனவை ஒரு சாதாரண நடைமுறையாகச் செய்கிறார்கள். ஆனால் 2022 ஆம் ஆண்டில், இறக்குமதி கட்டுப்பாடுகளுடன் சந்தையில் தேவையான பொருட்கள் கிடைக்காததாலும், சந்தையில் கிடைக்கும் பொருட்களுக்கு அதிக விலை இருப்பதாலும் நடைமுறையில் இதைச் செய்ய முடியவில்லை. மேலும், தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கலை பதிவு செய்யும் போது ஈஆர்பி முறைமை சிக்கல்கள் தீர்ப்பனவு தாமதத்தை பாதித்திருந்தது.<br><br>கொவிட்-19 காலப்பகுதியின் போது அசல் ஆவணங்களை இழந்ததன் காரணமாக, ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக உள்ளது, அவற்றை உடனடியாகத் தீர்ப்பனவு செய்வதற்காக சம்பந்தப்பட்ட எச்ஓடி இற்கும் அனுப்பப்பட்டது.<br><br>நீண்ட காலமாக நிலுவையாக உள்ள அனைத்து காசு முற்பணங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தீர்ப்பனவு செய்யப்படாத தொகைகளுக்கு வழக்கமான நினைவூட்டல்கள் சம்பந்தப்பட்ட எச்ஓடி இற்கு அனுப்பப்படும். | பெறுகை/ சேவை/ பணியை பூர்த்தி செய்த பின்னர், குறிப்பிட்ட காலத்திற்குள் காசு முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

-

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு | விமான நிலையங்களை நிறுவுதல் அல்லது விரிவுபடுத்துதல் தொடர்பான பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு 2023 மே 15 வரை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அங்கீகாரத்தை கம்பனி பெற்றிருக்கவில்லை.<br><br>முகாமைத்துவ கருத்துரையின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட விலை மனுதாரரிடமிருந்து முன்மொழிவுகளுக்கான புதிய கோரிக்கையை அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆலோசகரொருவரை தெரிவுசெய்வதற்கு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. 2023 திசெம்பர் 16 ஆம் திகதிய ஏற்றுக்கொள்ளல் கடிதம் (எல்ஓஏ) வழங்கப்பட்டதுடன் அது தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது . எனினும், ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் இறுதியாக பேச்சுவார்த்தை மற்றும் இணங்கப்பட்ட விதிமுறைகளில் இருந்து விலகி, திருத்தம் செய்வதற்கு விரும்பினார். எனவே, வரிசை அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இந்த நோக்கத்திற்காக புதிய முன்மொழிவு கோரிக்கையை (ஆர்எவ்பி) கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பிரதான திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் சிவில் விமான போக்குவரத்து சட்டத்தில் உள்ளது போல் அங்கீகாரத்தை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டலின் 2.2.2 (ஆ) xii, மற்றும் 4.3 (அ), (ஆ) பிரிவு | சபை உபகுழுக்களின் முறையான செயற்பாடு மற்றும் கம்பனியின் இடர் சுயவிபரத்தை இனங்கண்டு மதிப்பிடுவதற்கு இடர் குழுவின் வகிபங்கு மற்றும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்கி அமுல்ப்படுத்துதலை உறுதிப்படுத்துதல் மற்றும் இடர் மதிப்பீட்டு பொறிமுறை உள்ளடங்கிய இடர் தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு | இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு (ஆர்எம்எவ்) ஐஎஸ்ஓ 31000 இணக்க செயன்முறையின் கீழ் உருவாக்கப்பட்டு வருகிறதுடன் இடர் சுயவிபரம் ஆர்எம்எவ் இன் ஒரு பகுதியாகும். அது மட்டுமின்றி, ஈஆர்எம் மூலோபாய நோக்கங்களைத் தீர்மானித்தல், இடர் வகைகளை நிர்ணயித்தல் மற்றும் பொதுவான இடர் | இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் இடர் மதிப்பீட்டு பொறிமுறை உள்ளிட்ட இடர் தணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமைக்காக பரிந்துரைக்கப்பட்ட உத்திகள் அமுல்ப்படுத்தப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறைமைக்கான உத்திகளை பரிந்துரைத்தல் வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டை கம்பனி பூர்த்தி செய்திருக்கவில்லை. முகாமைத்துவ கருத்துரையின் பிரகாரம் இடர் முகாமைத்துவ கட்டமைப்பு (ஆர்எம்எவ்) தயாராகி வருகிறது. | விளக்கங்கள், சாத்தியக்கூறு மற்றும் விளைவுகளின் மெட்ரிக்ஸ் (metrix) அபிவிருத்தி மற்றும் இடர் நாட்டம் மற்றும் சகிப்புத்தன்மை மெட்ரிக்ஸ் ஆகியன உருவாக்கப்பட்டு வருகின்றன. இடர் பதிவேட்டில் இனங்காணப்பட்ட அனைத்து இடர்களிற்காகவும் சாத்தியக்கூறு மற்றும் விளைவுகள் மெட்ரிக்ஸ் உள்ளது. ஓரளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் அரசாங்க கணக்காய்வாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. | பட வேண்டும். |
| (இ) | 2.2.2 (ஆ) xiv, 2.3 ஆம் பிரிவு | செயற்திறன் சிறப்பை மேற்பார்வையிடுவதில், கம்பனியின் நோக்கங்களை அடைந்துகொள்வதைக் கருத்தில் கொண்டு, கம்பனிக்குள் ஒரு பிந்தைய மதிப்பாய்வு பொறிமுறை நிறுவனமயமாக்கப்பட வேண்டும். மேலும், பணிப்பாளர் சபை அவ்வப்போது மதிப்பாய்வு செய்து, மூலோபாயத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதன் செயற்திறனை உறுதிப்படுத்த வேண்டியதுடன் தேவைப்பட்டால், திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், முக்கிய செயற்திட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பான முக்கியமான சிக்கல்களுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளில் காலாண்டு ரீதியான கண்காணிப்பு இடம்பெற்று எச்ஓடிகள் பல்வேறு எதிர்ப்பை வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது, இது ஒரு காலத்தை எடுத்துக்கொள்ளும் பணியாகும், அதே நேரத்தில் பணிக்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய இணையான நிர்வாகத்துடன் பணிச்சுமையை அதிகரிக்கும். | முக்கிய செயற்திட்டங்கள் அல்லது ஒப்பந்தங்கள் தொடர்பான முக்கியமான சிக்கல்கள், தாமதத்திற்கான காரணங்கள், செயற்பாட்டின் விளைவுகள் போன்றவற்றுடன், சுருக்க வடிவில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டும். பீஓடி தொடர்ந்து முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (ஈ) | 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை – அரச | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடமையாக்கப்பட்ட பொதுமுயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேடு | | | |
| (i) | 1 ஆம் பிரிவு | தற்போதுள்ள கட்டமைப்புக்களுக்கும், அரச உடமையாக்கப்பட்ட பொதுமுயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டில் பரிந்துரைக்கப்பட்டவற்றுக்கும் இடையே உள்ள இடைவெளியை பகுப்பாய்வு செய்வதற்கு, ஏனைய செயற்பாட்டுத் தலைவர்களுடன் இணைந்து ஒரு இடைவெளி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் செயற்பாட்டுக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தகுந்தவாறு, அவற்றின் தற்போதைய செயற்பாட்டுக் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கு சபைகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேற்படி தேவைப்பாடு இன்னும் கம்பனியால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டுக் கையேட்டின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்கள்/ பிரிவு முகாமையாளர்களுக்குக் காலாண்டுக்கு ஒருமுறை தேவைப்படும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தி சபை மட்டத்தில் செயற்பாட்டுக் கையேட்டுடன் இணங்குவதைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போதுள்ள கட்டமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டு கையேட்டில் பரிந்துரைக்கப்பட்டவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியை பகுப்பாய்வு செய்வதற்கு ஏனைய செயற்பாட்டுத் தலைவர்களுடன் இணைந்து ஒரு இடைவெளி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 3.2 ஆம் பிரிவு | பதவியணி பதவிநிலைகள், ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்), ஊதிய கட்டமைப்பு மற்றும் படிகள் உட்பட பதவியணியினர் தொடர்பான கோரிக்கைகளை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (டிஜீஎம்எஸ்) பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக, சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரைகளுடன் பொருத்தமானவாறு பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் (டிஜீபிஈ) அல்லது தேசிய பாதீட்டு | இணங்கப்பட்டது. எஸ்ஓஆர்பி மீளாய்வு செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதுடன் பதவியணி அங்கீகாரங்களும் ஒரே நேரத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் ஏற்பாடுகளிற்கு இணங்க ஆட்சேர்ப்பு திட்டத்தை தயாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்கள பணிப்பாளர் நாயகம் (டிஜீஎன்பீ) ஆகியோரிற்கான பிரதியொன்றுடன் கம்பனி சமர்ப்பிக்க வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாடுகள் கம்பனியால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 3.4 ஆம் பிரிவு | வேலை விவரம், கல்வித் தகைமைகள், அனுபவம் போன்றவற்றை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டங்களை வகுப்பதை கம்பனி உறுதிப்படுத்த வேண்டும். எனினும், பணி விபரம் மற்றும் ஆட்சேர்ப்பு முறை ஆகியன பயன்படுத்தப்பட்டு வருகின்ற கம்பனியின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. எஸ்ஓஆர்பி மீளாய்வு செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறதுடன் அடிப்படை சம்பள கட்டமைப்பு, எஸ்ஓஆர்பிகள், வேலை விபரங்கள் நெறிப்படுத்தப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படும். | வேலை விபரம் மற்றும் ஆட்சேர்ப்பு முறை ஆகியன கம்பனியின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். |
| (iv) | 4.3 (i), (iii) ஆம் பிரிவு | கம்பனி அதன் தேவை மதிப்பீடு மற்றும் தேவையான பொருட்களின் சரியான அளவு, தரம் மற்றும் நேரத்தை தீர்மானிப்பதற்கு ஒரு முறையான பொறிமுறையை மேற்கொள்வது ஒரு தேவைப்பாடாகும். மேலும், உள்ளீடுகளை முகாமை செய்வதற்கு முறையான சரக்கிருப்பு முகாமைத்துவ முறைமை இருப்பதை கம்பனி உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 955 இருப்பு உருப்படிகளுக்கு பூச்சிய இருப்பு மீதிகள் காணப்பட்டன. | விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு நாளாந்த பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு பணியின் பயன்பாட்டிற்காக பீஐஏ, ஆர்எம்ஏ மற்றும் எம்ஆர்ஐஏ ஆகிய இடங்களில் உள்ள அதன் களஞ்சியங்களில் 12000 இற்கும் மேற்பட்ட (எஸ்கேயூகள்) உருப்படிகளை பேணி வருகிறது.<br><br>எஸ்சீஎம் பிரிவு அவ்வப்போது பயனர் பிரிவுகளுடன் ஒருங்கிணைக்கும் இருப்பு மட்டங்களை அவர்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு மாற்றுகிறது, ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களால் போதிய இருப்பு இல்லாமல் இருக்கலாம். மேலும் கொவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதியில் இது மோசமானதாக மாறியது.<br><br>எனினும், ஏஏஎஸ்எல் இன் | உள்ளீடுகளை முகாமை செய்வதற்கு முறையான சரக்கிருப்பு முகாமைத்துவ முறைமை இருப்பதை கம்பனி உறுதிப்படுத்த வேண்டும். களஞ்சியங்களில் உள்ள இருப்பு உருப்படிகளின் கிடைப்பனவு குறைந்தபட்சம் அத்தியாவசியமான மற்றும் விரைவாக நகரும் உருப்படிகளுக்காக உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சபை தற்போது ஏஎஸ்எல் இற்கான பெறுகை கையேட்டைத் தயாரித்து திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் தாமதமாகும் விடயங்களை நிவர்த்திசெய்வதற்கும் சபை உறுப்பினர் ஒருவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்திருந்தது. மேலும், வேகமாக நகரும் உருப்படிகளின் இருப்பு மட்டங்களை தீர்மானிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு, 2வது குழுவின் முதலாவது கூட்டம் 2023/05/18 இல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. | |
| (v) | 6.6 ஆம் பிரிவு | வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், கம்பனியின் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. எனினும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் போன்ற வணிக நிறுவனத்திற்காக இந்த கால எல்லை மிகவும் நடைமுறைக்கு மாறாக உள்ளதுடன் யதார்த்தமற்ற காலவரிசையாகும். ஆண்டறிக்கை (தரம் மற்றும் அளவு அம்சங்களில் செறிவூட்டல்) தயாரிக்கும் செயன்முறை சிரத்தையுடன் செய்யப்பட வேண்டும், மேலும் இதற்கு சிங்களம் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளுடன் சராசரியாக குறைந்தபட்சம் 3-4 மாதங்களை எடுத்துக்கொள்கிறது. | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். |
| (vi) | 6.11 ஆம் பிரிவு | வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்களிதன்மையை உறுதிப்படுத்தும் அதே நேரம் தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு கம்பனியை எளிதாக்கும் உள்வாரி மற்றும் வெளிவாரி இரண்டிலும் அதன் பங்குதாரர்களுடன் தெளிவான தொடர்பாடல் கொள்கையை கம்பனி கொண்டிருக்க வேண்டும், | இணங்கப்பட்டது. ஈஆர்பி உருவாக்கப்படும் வரை செயற்திட்டங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு தற்காலிக முறைமையை உருவாக்குவதற்கு 2023.02.27 இல் நடைபெற்ற ஏஎம்சீ கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு ஏஎம்சீ தலைவரால் பணிக்கப்பட்டது, ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தேவையான அனைத்து | செயற்திட்ட செயலாக்கத் திட்டம் கம்பனியின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும் கம்பனி பெறுகைத் திட்டம் மற்றும் செயற்திட்ட செயலாக்கத் திட்டத்தை கம்பனியின் வலைத்தளத்திற்குப் பதிவேற்றுவதும் கட்டாயமாகும். எனினும், செயற்திட்ட செயலாக்கத் திட்டம் இதுவரை கம்பனியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல்களையும்/ நிலையையும் உள்ளடக்கிய செயற்திட்ட கண்காணிப்புக்கான வடிவம் ஐரீ பிரிவால் உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம், அனைத்துப் பிரிவுகளும் தங்கள் வரம்பிற்கு உட்பட்ட செயற்திட்டங்களின் தகவல்/ நிலையை உள்ளிடலாம்.<br><br>மேலும், ஐரீ பிரிவு இந்த வடிவமைப்பை ஒரு மையப்படுத்தப்பட்ட முறைமையாக உருவாக்கும் செயன்முறையில் உள்ளது, இதனால் செயற்திட்டங்களின் தகவல்/ நிலையை எந்த நேரத்திலும் சரிபார்க்க முடியும். | |
| (உ) | 2003 யூன் 2 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1, 9.3.1 (i) மற்றும் 9.7 ஆம் பிரிவு | பதவியணி பதவிநிலைகள், ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்), ஊதிய கட்டமைப்பு மற்றும் படிகள் உட்பட பதவியணியினர் தொடர்பான கோரிக்கைகளை, முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக, சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரைகளுடன் கம்பனி சமர்ப்பிக்க வேண்டும். எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனி மீளாய்வாண்டிற்காக ரூபா 2,216 மில்லியன் கூட்டுமொத்த தொகையான பல்வேறு வகையான 16 படிகளை சபை அங்கீகாரத்துடன் மாத்திரமே பதவியணியினரிற்கு | இணங்கப்பட்டது. இப்பிரச்சனையை உரிய நேரத்தில் சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தியிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2015 மே 25 இன் பிஈடி 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2022 சனவரி 14 இன் 01/2015 (ii) ஆம் இலக்க சுற்றறிக்கை | கம்பனியின் எச்எம் 1-1 வகைக்கு சமமான அல்லது அதற்கு மேலான பதவி அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு 115 லீற்றர்கள் தகுதியுடையவையாகும். எனினும், எஸ்10 சம்பள அளவுத்திட்டத்தில் உள்ள 128 உத்தியோகத்தர்களுக்கு 130 லீற்றர்களும், எஸ்11 இன் 209 உத்தியோகத்தர்களுக்கு 200 லீற்றர்களும் (சம்பள அளவுத்திட்டத்திற்கு மேல் கம்பனியால் வழங்கப்பட்டது) கம்பனியால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாதிரி கணக்காய்வு சோதனையில் வெளிப்படுத்தப்பட்டவாறு, மீளாய்வாண்டின் போது 337 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 88.9 மில்லியன் தொகையான 240,280 லீற்றர் எரிபொருள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி மாதாந்த எரிபொருள் படிகளாக வழங்கப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது. எனினும், உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு முறையே 130 லீற்றர் மற்றும் 200 லீற்றர் எரிபொருளை வழங்குவதற்காக எஸ்10 மற்றும் எஸ்11 மற்றும் அதற்கு மேல் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பீஓடி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | மேலதிக எரிபொருள் ஒதுக்கீட்டு கொடுப்பனவிற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு அல்லது நிதி அமைச்சிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2021 ஏப்ரல் 27 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானம் (இல. பீபி-பீஎம்-03-27/04/2021) | கம்பனியின் பிரிவுகளின் செயற்திறனைக் கண்காணிப்பதற்கு உட்கட்டமைப்பு கொத்தணி, நிதி மூலோபாய கொத்தணி, செயற்பாட்டு மூலோபாய கொத்தணி மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் வணிக அகபிவிருத்தி மூலோபாய | அனைத்து பிரிவுகள் மற்றும் அலகுகள் 05 கொத்தணிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டதுடன் கூட்டிணைந்த திட்டங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பிரதேச செயல்நடவடிக்கைத் திட்டங்களின் அடைதல்கள் போதுமான காலத்தை | சபைத் தீர்மானத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

கொத்தணி மற்றும் மனிதவள மூலோபாய கொத்தணி என ஐந்து (5) கொத்தணிகள் நியமிக்கப்பட்டிருந்தன. எனினும், மீளாய்வாண்டில் அந்த ஐந்து கொத்தணிகள் தங்கள் பணிகளைச் செய்திருக்கவில்லை.

ஒதுக்கி மதிப்பாய்வு செய்யப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் முதல் 02 காலாண்டுகளில் நடாத்தப்பட்டிருக்காத எச்ஆர்எம் மூலோபாய கொத்தணியை தவிர, அனைத்து கொத்தணி மதிப்பாய்வுகளும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன, அப்போது வீசீ தலைமை வகித்தார். இந்த கொத்தணிகள் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியது. விலகல்கள் மற்றும் ஆலோசனைகள் அல்லது பரிந்துரைகள் சபை பத்திரமொன்றின் மூலம் சபைக்கு அனுப்பப்பட்டது

எனினும், கால அழுத்தங்கள், விரிவான பணிச்சுமைகள் மற்றும் இணையான நிர்வாகம் தொடர்பாக HoDs ஆல் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு பிரச்சனைகள காரணமாக இந்த காலாண்டு ரீதியான மதிப்பாய்வு அமர்வுகளை தொடர முடியாதிருந்தது (HoDs நிறைவேற்று பணிப்பாளர்களிற்கு செய்த அறிக்கையின் வரிசையைத் தவிர, நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும்). எனவே, எதிர்ப்பை முகாமை செய்வதற்கான பிரதிபலிப்பாக, கொத்தணி தலைவர்கள் காலாண்டு முன்னேற்ற மதிப்பாய்வு (கண்காணிப்பு) அமர்வுகளை நிறுத்தியது.

## 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டு ஆண்டிற்கான வணிகத்தின் வருமானத்தைக் கணிப்பிடும் போது வருமானம் ஈட்டுவதில் ஆண்டின் போது ஏற்படும் செலவினங்கள் கழிக்கப்பட வேண்டும். இந்த பிரிவின் கீழ் ஒரு மூலதன தன்மையான செலவினங்களுக்காக எந்த விலக்கும் அனுமதிக்கப்படாது. எனினும், வணிகத்திலிருந்து மதிப்பிடக்கூடிய வருமானத்தைக் கணிப்பிடும் போது, மீளாய்வாண்டில் கடன் மீளகொடுப்பனவிற்காக கம்பனியால் பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 1255 மில்லியன் தொகையானது ஐஆர்டி இடமிருந்து முறையான அங்கீகாரமின்றி கழிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு முதல் இந்தச் சீர்செய்தல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2021/22 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி ரூபா 376.5 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இது 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் (ஐஆர்டி) முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய வரி ஆலோசகர் உட்பட ஏஜஎஸ்எல் ஆல் பணிக்கமர்த்தப்பட்ட ஏறக்குறைய அனைத்து வரி ஆலோசகர்களுக்கும் இது போன்ற எந்த பிரச்சனையும் காணப்படவில்லை. | வரிக் கணிப்பீட்டில் திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட கடன் மீள்கொடுப்பனவை கழிப்பதற்கு ஐஆர்டி இடமிருந்து முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றில் பிடித்துவைத்தல் வரிகள் மற்றும் குறிப்பிட்ட வரிகள் தொடர்பாக 1999/2000 மற்றும் 2013/2014 மதிப்பீட்டு ஆண்டிற்காக ரூபா 848 மில்லியன் தொகை பெறவேண்டிய வருமான வரியாகக் காட்டப்பட்டுள்ளது. பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2023 சனவரி திகதிய தனது அறிக்கையில் விரிவான கணக்காய்விற்கு உட்பட்டு ரூபா 321 மில்லியன் தொகை மீளளிக்கப்படலாம் என்பதை உறுதிப்படுத்தியிருந்தது. எனவே, ரூபா 527 மில்லியன் தொகையான பெறவேண்டிய வருமான வரியின் தேறல் நிச்சயமற்றது. | சம்பந்தப்பட்ட அனைத்து கடிதங்களும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் பணத்தைத் திரும்பப் பெறுவதில் உள்ள தாமதம் ஐஆர்டியின் முடிவில் இருந்து வருகிறது. | பெறவேண்டிய வரிக்கான உறுதிப்படுத்தல் ஐஆர்டி இடமிருந்து கோரப்பட வேண்டும், மேலும் அது உறுதிப்படுத்தப்படாவிட்டால், அதற்கிணங்க கணக்குகள் சீர்செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 22 (6), (6) (iv) (அ) பிரிவின் பிரகாரம் இந்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவாறு வெளியீட்டு வரியிலிருந்து எந்த விலைப்பட்டியலும் அத்தகைய வரி விலைப்பட்டியல் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் முடிவடையும் அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் எந்தவொரு வரி விதிக்கக்கூடிய காலப்பகுதிக்கும் அந்த வரி விதிக்கக்கூடிய காலப்பகுதிக்கான வருமானத்தை குறித்த பன்னிரண்டு மாதங்களுக்குள் வழங்குவதன் மூலம் கழிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 1,111,705 விலைப்பட்டியலிற்காக கம்பனி ரூபா 82,348 தொகையை கோர முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாத வழங்குநர் முற்பணத்தின் ரூபா 29,835,772 இற்கான விலைப்பட்டியல்கள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. எனவே, கோரப்படாதவற்றின் மொத்த வற் பெறுமதியை இது மதிப்பிடாது. | இணங்கப்பட்டது. தீர்ப்பனவிற்காக கொடுக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிதிக்கு அனுப்பப்படும் விலைப்பட்டியல்கள் உட்பட வற் தொடர்பான கடிதங்கள் வழங்கப்பட்ட எந்த உள்ளீடு வற்றிற்கும் நிதி கோரலாம். எனினும், குறிப்பிட்ட விடயத்தில், ஈஆர்பி முறைமை சிக்கலின் காரணமாக (எம்எஸ்ஐ உருவாக்கும் கட்டத்தில் தவறான உருப்படிக் குறியீடு இனங்காணப்பட்டது) இந்த விலைப்பட்டியலை (விலைப்பட்டியல் இல. எஸ்ஐ-5023-007773- ரூபா.1,111,705.10) தீர்ப்பனவு செய்யப்பட முடியாதிருந்தது. இந்த விடயம் ஈஆர்பி அமுல்ப்படுத்தும் பங்காளரான ஐஎவ்எஸ் இற்கு எல்சீஎல் விடயம் மூலம் முறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் உள்ளீட்டு வற் கோரப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,802,697,567 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 2,083,501,758 ஆக இருந்தது. எனவே நிதி விளைவுகளில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 18,620,225,217 ஆல் அதாவது 250 சதவீதம் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 1,147,618,739 ஆல் அதாவது 230 சதவீதம் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விபரம் | 2022 (ரூபா) | 2021 (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| விமான பயணம் தொடர்பான வருமானம் | 6,194,101,107 | 2,299,185,952 | 3,894,915,155 | 169 |
| விமான பயணம் அல்லாத வருமானம் | 19,812,294,504 | 5,086,984,442 | 14,725,310,062 | 289 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏனைய வருமானம் | 1,640,400,773 | 492,782,034 | 1,147,618,739 | 232 |
| நிதி வருமானம் | 6,136,674,362 | 3,321,110,256 | 2,815,564,106 | 84 |
| **நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள்** | | | | |
| பதவியணியினர் கிரயம் | 7,993,463,942 | 6,040,068,058 | 1,953,395,884 | 32 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 475,950,365 | 354,388,479 | 121,561,886 | 34 |
| **நிதிக் கிரயம்** | | | | |
| **செலாவணி இலாபம்/ (நட்டம்)** | 43,977,059,211 | 2,141,205,420 | 41,835,853,791 | 1953 |
| **(கடன்கள் மீது)** | | | | |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஏனைய வருமானம், விமான பயண வருமானம் மற்றும் விமான பயணம் அல்லாத வருமானம் முறையே 232, 169 மற்றும் 289 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திருத்த மற்றம் பராமரிப்பு கிரயம் 34 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்நியச் செலாவணி இலாபம்/ (நட்டம்) 1953 இனால் அதிகரித்திருந்தது. (வெளிநாட்டு பணத்தற்கு எதிராக இலங்கை ரூபா குறைவடைந்தமை காரணமாகும்.)

## 2.3 விகித பகுப்பாய்வு

| **விகிதத்தின் வகை** | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 4.23 | 5.98 | 7.68 | 7.23 | 3.49 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 4.1 | 5.88 | 7.55 | 7.10 | 3.43 |
| புரள்வு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை | 2.44 | 1.66 | 1.38 | 1.38 | 1.73 |
| தேறிய இலாப / (நட்ட) விகிதம் % | 17 | (26) | (31) | 43 | 18 |
| பங்கொன்றிற்கான அடிப்படை (நட்டம்) / உழைப்பு (ரூபா) | 24013 | (10,417) | (12,522) | 54,979 | 26,566 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 3 | (2) | (2) | 10 | 5 |
| பிரயாணி ஒருவரிற்கான வருமானம் (ரூபா) | 5024 | 5,234 | 3,373 | 2,580 | 2,640 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நடைமுறைச் சொத்து விகிதம் படிப்படியாக குறைவடைந்திருந்தது. கடன்களின் நடைமுறைப் பொறுப்பு ரூபா 8,955 மில்லியனால் அதிகரித்தமை, வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை ரூபா 4,313 மில்லியனால் அதிகரித்தமை என்பன நடைமுறை விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதம் என்பன குறைவடைந்தமைக்கு பங்களித்த முக்கிய காரணங்களாகும்.

(ஆ) பங்கொன்றிற்கான உழைப்பு ஆண்டில் 330 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டின் நட்டம் மீளாய்வாண்டின் போது இலாபத்திற்கு மாற்றப்பட்டமை பிரதான காரணங்களாக இருந்தன.

(இ) 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை புரள்வு விகிதம் படிப்படியாக குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளின் (KPIs) பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 37,641 | 21,204 | 20,881 | 62,195 | 67,351 |
| மொத்தப் பயணிகள் அசைவின் எண்ணிக்கை | 5,503,198 | 1,505,479 | 2,375,056 | 9,958,688 | 10,884,028 |
| விமான சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொண்) | 173,597 | 241,506 | 150,075 | 259,089 | 279,559 |
| மேலே பறக்கும் அசைவுகள் (எண்ணிக்கை) | 23,846 | 9,339 | 16,370 | 45,674 | 43,804 |
| கையாளப்பட்ட விமானம் ஒன்றிற்கான மொத்தக் கிரயம் (ரூபா.'000) | 727 | 574 | 738 | 235 | 318 |

கொவிட் 19 தொற்றுநோய் விமான சேவைகளுக்கு பாரியளவில் தாக்கம் செலுத்திய காரணத்தினால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பாக 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் அனைத்து பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளில் செயலாற்றல் வீழ்ச்சியடைந்திருந்தன. முகாமைத்துவத்தின் கருத்துரைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் வழமையான நிலைமைக்கு திரும்புதல் ஆரம்பமாகியிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் 23 பிரிவுகளுக்குரிய 7527 உருப்படிகள் தொடர்பாக வருடாந்த பொருள் கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 3,783.8 ஆன நடைமுறைச் சொத்துக்கள் பௌதீக ரீதியாக இனங் காண்பதற்கு முடியாமல் இருந்ததன் காரணமாக பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது ஆதலால் அச் சொத்துக்களின் இருக்கும்தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது. | இறுதிக் கணக்குகளுக்குரிய கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் 2023 மே 10 ஆம் திகதி அனைத்து பிராந்திய கணிப்பீட்டு சபைகளில் பொழிப்பாக்கப்பட்ட அறிக்கை ஒன்று அரச கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட மற்றும் காணபடாத அனைத்து பிரிவுகளும் இனங்காணப்பட்டு மிகை சொத்துக்கள் மற்றும் அகற்ற வேண்டிய சொத்துக்கள் விரிவாக பதிவேடொன்று சமர்ப்பிக்கப்படும் | நி.பி. 507 இன் பிரகாரம் சொத்துக்களும் ஆண்டின் இறுதியில் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் பௌதீக இருப்பை இனங்காண்பதற்கு முடியாமல் இருந்தமை காரணமாக மீள்மதிப்பீடு செய்ய முடியாத இந்த சொத்துக்களின் பட்டியல் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2011 மார்ச் 29 ஆம் திகதி எயார்போட் அனட் ஏவியேஷன் சேர்விஸஸ் (இலங்கை) லிமிட்டட் (ஏஏஎஸ்எல்) மற்றும் ஸ்ரீ லங்கன் உயார்லைன்ஸ் லிமிட்டட் (எஸ்எல்ஏஎல்) ஆகியவற்றுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் (எம்ஓயூ) இன் பிரகாரம் ஏஏஎஸ்எல் இனால் இலங்கை விமான சேவைகள் கம்பனிக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இட வசதிகளை எதிர்காலத்தில் வழங்குவதுடன் இரு தரப்பினரும் குத்தகை ஒப்பந்த்ததிற்கு வர வேண்டும் எவ்வாறாயினும் குத்தகைய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படாமல் 2011 ஆம் ஆண்டு முதல் எஸ்எல்ஏஎல் இற்கு 3 இடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன ஆனால் மேலும் ஏஏஎஸ்எல் இன் செயற்பாடுகள் மற்றும் 7 நிலையங்கள் குத்தகை கைச்சாத்திடப்படாமல் வழங்கல் கடிதங்கள் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. | புரிந்துணர்வு உடன்படிக்கை 2011 மார்ச் 29 ஆம் தேதி முதல் 2028 மார்ச் 31 ஆம் தேதி வரை செல்லுபடியாகும் இது இலங்கை விமான சேவைகள் கம்பெனி மற்றும் இலங்கை கேட்டரின் ஆகியஇரண்டையும் மேவுகை செய்கின்றது இலங்கை விமான சேவைகள் கம்பெனியுடன் கைச்சாதிட உள்ள 05 உடன்படிக்கைகளில் 2 உடன்படிக்கைகளில் தற்போது கைச்சாத்திட்டுள்ளது ஏஏஎஸ்எல் கைச்சாத்திட்டுள்ளது. உடன்படிக்கை கைச்சாதிடும் வரை எஞ்சிய உடன்படிக்கைகளின் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நிர்வகிக்கப்படும் | குத்தகை உடன்படிக்கை தாமதமின்றி கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கம்பனியின் ஒவ்வொரு பிரிவின் செயற்பாடுகளுக்குரிய பிரதான செயலாற்றுகை குறியீடுகள் இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் உண்மையான செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் அந்த பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை அடைந்து கொள்வதற்காக அளவிடுவதற்காக பிரதான செயலாற்று வழிகாட்டிகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் திரைசெய்து அறிவுறுத்தவர்கள் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு தடை இல்லாமல் குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டும் | அடுத்த 3 ஆண்டுகளுக்காக தொடர்ச்சியாக நடத்துச் செல்லும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பகுதிகள் விரிவாக்க திட்டத்தில் துறைகளின் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் இனங் காணப்பட்டுள்ளன அடிப்படை பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் இலக்கிடப்பட்ட பிரதான செயலாற்று குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு வருடாந்தம் திருத்தம் செய்யப்படுகின்றது | கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்றலை அளவிடுவதற்காக பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 பெப்ரவரி 9 ஆம் தேதி திறைசேரி செயலாளரின் PE/GOCO/1/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு கம்பெனிக்கு கட்டளை இடப்பட்டிருந்தது<br>i. தற்போது அரசுக்கு சொந்தமான விமான நிலையத்தின் காணி மற்றும் கம்பெனிக்கு சொந்தமான ஏனைய அசையும் அசையாத சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>ii. இலங்கை அரசினால் தற்போது விமான நிலைய அபிவிருத்திக்குரிய சேவைகள் செய்யப்படுகின்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும்<br>iii. இவ்வாறு கையளிக்கப்பட்ட தேறிய சொத்துக்களுக்காக இலங்கை அரசுக்கு பங்குகளை வழங்குதல்<br>எவ்வாறாயினும் கம்பனி பொறுப்பினை மாத்திரம் பொறுப்பேற்றுள்ளதுடன் அரசுக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய அசையும் அசையாத சொத்துக்களின் பெறுமதி தேதிய | அரசின் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஊடாக அனைத்து அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் செயற்பாடு தற்போது நடைபெற்று வருகின்றது எவ்வாறாயினும் ஏஏஎஸ்எல் இனால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் உரித்து கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை மதிப்பீடு செய்யும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அனைத்து அசையாத சொத்துக்கள் சட்டரீதியான உரிமையை விடுவிப்பதற்கு உட்பட்டு கணக்குகளில் எடுக்கப்படும். மேலும் 2010 14 ஆம் இலக்க விமான சேவைகள் சட்டத்தின் மூலம் அதிகாரமுள்ள சேவை வழங்குமாறு அனைத்து அசையும் அசையாத சொத்துக்களை பயன்படுத்துவதற்காக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் விருப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சிக்கலை மேலும் தாமதமின்றி | திறைசேரி அறிவுறுத்தல்களுக்கு இணங்க வேண்டியுடன் அத் தேவைப்பாட்டை நிறைவேற்ற தடைகள் இருந்தால் குறித்த தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களை கையளிப்பதற்கு இலங்கை அரசிற்கு பங்குகளை வழங்குவதற்கோ அல்லது கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கோ எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை | தீர்வு செய்வதற்காக 2022 செப்தெம்பர் 13 ஆம் திகதி துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது | |
| (உ) | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் எந்த ஒரு சாத்தியவள ஆய்வு ஒன்றையும் மேற்கொள்ளாமை காரணமாக நுழைவு அனுமதி பத்திரங்கள் போதியளவு இல்லாமல் இருந்தமை ஈஆர்பி முறை மூலம் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. ஆதலால் முறையான ஆய்வு ஒன்று இல்லாமல் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. இறுதியாக கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சகல பிரிவுகளும் முறைமைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக பயன்படுத்துபவர்கள் அதிகளவில் தொடர்புகொள்ளப்பட்டதால் வழங்கப்பட்டுள்ள நுழைவு அனுமதிப்பத்திரம் ஈஆர்பி முறைமையை செயற்படுத்துவதற்கு போதியளவு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் ஒரே கடவுச்சொல் பயன்படுத்துவதால் பல பயன்படுத்துநர்கள் முறைமைகளை அணுகுவது அவதானிக்கப்பட்டது. | ஏஏஎஸ்எல் இனால் கொள்வனவு மற்றும் இன்வாய்ஸ் செய்யும் செயற்பாடு ஒவ்வொரு பிரிவின் கீழ் கையாளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டதால் கொள்வனவு அனுமதிப்பத்திரம் போதிய அளவில் இருக்கவில்லை அதற்காக வேரான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | பயன்படுத்துநர்களின் சிக்கல்களை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும் |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு கிரயம் ரூபா 2,033 மில்லியன் ஆக | இணங்குகின்றோம். ஏஏஎஸ்எல் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் சர்வதேச சிவில் | மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினை மிகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான வகையிலும் இலாபகரமான வகையிலும் |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் அது செயற்பாட்டு வருமானத்தை விட 26 மடங்கினால் அதிகரித்து இருந்தது. அந்நியச் செலாவணி நட்டம் மற்றும் 2017 முதல் 2022 வரை ரூபா 42,818 மில்லியன் ஆன வரி கொடுப்பனவிற்கு பின்னரான தேறிய நட்டத்தை பிரதான காரணமாகக் கொண்டு மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான தேறிய நட்டம் ரூபா 22,214 மில்லியன் ஆக இருந்தது. மத்தள விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகள் இயலளவு ஒரு மில்லியனாக இருந்த போதிலும் கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்த பயணிகளின் எண்ணிக்கை 103,324 மாத்திரமாக இருந்ததுடன் கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்த பிரயாணங்களின் எண்ணிக்கை 2,612 ஆக இருந்தன. ஆதலால் விமான நிலையத்தின் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ஐ.அ.டொலர் 247.7 மில்லியனிற்கு சமமான ரூபா 36,564 மில்லியன் மொத்தத் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி நிர்மாணத்திற்காக பெற்றுக்கொண்ட ஐ.அ.டொலர் 190 மில்லியன் கடனுக்காக வருடாந்தம் கடன் தவணையாக ஏஏஎஸ்எல் இனால் ரூபா 1,842 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | விமான நிலையம் ஒன்றாக செயற்படுத்துதல் இலங்கை அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். அது ஏஏஎஸ்எல் இன் தீர்மானம் ஒன்றல்ல. | செயற்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 1,154 மில்லியன் நட்டம் உட்பட 2017 ஆம் ஆண்டு முதல் 2022 வரை இரத்மலான கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் (சீஐஏஆர்) திரட்டிய நட்டம் ரூபா 2,827.9 மில்லியன் ஆக இருந்தது கம்பெனியினால் | இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகளை சர்வதேச சிவில் செயற்பாடுகள் வரை மேம்படுத்துவது அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். மேலும் சீஐஏஆர் இன் செயற்பாட்டு மாதிரி | இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தினை மிகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான வகையிலும் இலாபகரமான வகையிலும் செயற்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

தெரிவிக்கப்பட்டு இருந்த கருத்துரைகளின் பிரகாரம் சீஐஏஆர் இன் செயற்பாட்டு மாதிரி இலங்கையில் ஏனைய விமான நிலையங்களை விட வேறுபடுவதுடன் அது பிரதானமாக பயிற்சியளித்தல் மற்றும் உள்நாட்டு வர்த்த செயற்பாடுகளை செயற்படுத்துவதுடன் இலங்கை விமான படைக்காக வசதிகள் வழங்குவதாகும் மேலும் பறத்தல் வருமானம் ஏஏஎஸ்எல் இன் நிறுவன வருமானத்திற்கு ஈடுசெய்யப்படும். சீஐஏஆர் இன் நிதி நட்டத்திற்குரிய பிரதேச நிர்வாக நிலையத்திறகுரிய கிரயம் உட்பட்ட போதும் அதனை அண்மித்து கிடைக்கும் வருமானம் இதுவரை ஏஏஎஸ்எல் இன் வருமானத்திற்கு ஈடுசெய்யப்பட்டது பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் கீழ் சீஐஏஆர் இன் பறத்தல் வருமானம் ஈடு செய்யப்படும் இயலுமே தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஆனால் அது சீராக்கும் செயற்பாட்டுக்கு உட்பட்டு உள்ளது 2020 ஆம் ஆண்டின் போது பறந்த விமானங்கள் 13 மாத்திரமாக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் 38 விமான பயணங்களாக இருந்தன. 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயணிகள் அசைவு எண்ணிக்கை முறையே 60, 28 மற்றும் 54 ஆக இருந்தது

இலங்கையின் ஏனைய விமான நிலையங்களை விட வேறுபடுவதுடன் அது பிரதானமாக பயிற்சியளித்தல் மற்றும் உள்நாட்டு வர்த்தக செயற்பாட்டினை மேற்கொள்வதுடன் விமானப்படையின் செயற்பாடு நடைபெற வசதிகளை வழங்குவதற்காக உள்ளதாகும். ஆதலால் சர்வதேச விமான செயற்பாடுகளின் எண்ணிக்கை அடிப்படையில் மாத்திரம் இந்த விமான நிலையத்தின் செயற்பாடுகளை அளவிட முடியாது.

சீஐஏஆர் நிதி நட்டங்கள் பாரிய பிரதேச கட்டுப்பாட்டு நிலையங்களுடன் தொடர்புபட்ட கிரயத்தை உள்ளடக்குகின்ற போதிலும் ஒரு சூழ்நிலையில் அதனுடன் தொடர்புடைய அண்மித்ததாக பறத்தல் வருமானம் ஏஏஎஸ்எல் இன் நிறுவன வருமானத்திற்கு ஈடாகும். தற்போது பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின் கீழ், சீஐஏஆர் இற்கு அதிகமாக பறக்கும் வருமானத்தை உள்வாங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்து, ஏஏஎஸ்எல் அதை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மேலும், சீஐஏஆர் மற்றுழ் பீஐஏ இல் ஏஏஎஸ்எல் ஆனது அரச தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு எந்த வருமானமும் இல்லாமல் எஸ்எல்ஏஎவ் விமானங்களுக்கு வானூர்தி மற்றும் வானூர்தி சேவைகளை வழங்குகிறது. எஸ்எல்ஏஎவ் செயற்பாடுகளில் கிரய ஈடுபாடு மற்றும் அந்த கிரயம் தானாகவே விமான நிலைய செயற்பாட்டு கிரயத்தை பாதிக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்கு எந்த வழிமுறையும் காணப்படவில்லை.

| | | |
|---|---|---|
| (இ) 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது. விமான நிலையத்தின் ஆரம்பம் முதல் 166 விமான அசைவுகளும் 5035 பயணிகள் மாத்திரம் அறிக்கை இடப்பட்டு இருந்தவுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட திரட்டிய நட்டம் ரூபா 232.8 மில்லியனாகும். மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செயற்பாட்டு செலவினம் முறையே முறையே ரூபா 4.7 மில்லியன் மற்றும் ரூபா 81.8 மில்லியன் ஆக இருந்தது. | ஜேஐஏ தற்போது நிர்ணயிக்கப்பட்ட சர்வதேச செயற்பாட்டினை மீண்டும் ஆரம்பித்துள்ளதுடன் தற்போது வாரத்துக்கு 04 விமான பயணங்கள் செயற்படுத்தப்படுகின்றன மேலும் நிலப் பயன்பாடு சேவை மற்றும் தீர்வை வரியற்ற தரகு கட்டணத் தொகையிலிருந்து மேலதிக வருமானமொன்றை உழைத்துக் கொள்ளுகின்றது. | யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தினை மிகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான வகையிலும் இலாபகரமான வகையிலும் செயற்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) 2018 மார்ச் 25 ஆம் திகதி மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் மீண்டும் சிவில் செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டு இருந்ததுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபா 86.62 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதும் இதுவரை எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏஏஎஸ்எல் இனால் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் முன்னர் மேற்கொண்ட வகையிலே சிவில் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கை விமான படையுக்கு கையளிப்பதற்கு கருத்தில் கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக உத்தியோகபூர்வமான வேண்டுகோள் 2022 ஒக்தோபர் 18 ஆம் திகதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையத்தினை மிகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான வகையிலும் இலாபகரமான வகையிலும் செயற்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.4 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போககுவரத்து அதிகாரசபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 2050/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட கட்டளைகள் மூலம் அமைச்சரினால் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் | 1983 இன் 11 ஆம் இலக்க விமான அசைவுகள் விசேட சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் விமானநிலைய அதிகாரசபையில் காணப்படுகின்ற மற்றும் நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து அசையாத சொத்துக்கள் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளருக்கும் கையளிக்கப்பட வேண்டும். விமான நிலைய அதிகாரசபைக்கு உரித்தான பணம் உட்பட அல்லது நிர்ணயிக்கப்படுகின்ற திகதிக்கு | உரிய அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரம் முதலீடு செய்யப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக உயர்மட்டத்தில் கலந்துரையாடல் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். |

திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள விமான நிலையங்கள் (கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையம்) மற்றும் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு விமான வசதிகள் மற்றும் அதற்குரிய காணி (அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் மற்றும் அதற்குரிய காணி) இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. கம்பனி தாபிக்கப்பட்ட 1983 முதல் 2002 திசெம்பர் 31 வரை காணிகளின் உரிமைத்துவத்தை கையளிக்காமல் சட்ட ரீதியான சேவை வழங்கும் விமான நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்காக கம்பனி ரூபா 76,328 மில்லியனை (முகப்புப் பெறுமதி) முதலீடு செய்திருந்தது

முன்னர் அதன் உரித்தில் உள்ள மற்றும் நிர்வாகத்தில் காணப்படும் பணம் உட்பட அசையாத சொத்துக்கள் விமான அசைவு சட்டத்தின் 21 ஏ பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு கையளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் விமான படை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் சிவில் விமான சேவைகள் பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள மற்றும் அமைச்சரால் பிரதிநிதிக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அசையும் அசையாத ஆவணங்கள் 1982 சனவரி 20 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அவற்றுக்குச் சொந்தமான ஆதனங்களாக கருதப்படுகின்றது அரசுக்காக மற்றும் கம்பனிக்காக பிரதிநிதியால் ஏஏஎஸ்எல் 1982 இன் 2 ஆம் இலக்க விமானப்படை (விசேட சட்டங்களில்) ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் முகவராக உள்ளதுடன் தற்போது 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான சேவை வழங்கும் வழங்குனராக வர்த்தமானில் வெளியிடப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க மத்தள ராஜபகஷ, கொழும்பு விமான நிலையம் இரத்மலான, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையங்கள் அதன் பிரகாரம் ஏஏஎஸ்எல் இனால் அண்ணளவாக பாரிய முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது 1983 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் வரையான காணி கையேற்றல் மற்றும் விமான நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 76,328 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையை கடந்த 40 வருட கால பகுதியில் பாரியளவு அபிவிருத்தி முதலீடு ஒன்றை ஆனால் காணி அபிவிருத்தி செய்யப்பட்டு அக்கானிகளில் நிர்மாணித்ததன் பின்னர் காணி/ கட்டிடம் மற்றும் கட்டமைப்பு என்பன ஏஏஎஸ்எல் இற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் காணி கையேற்றல்,

| | | |
|---|---|---|
| | விமான நிலையம் மற்றும் அபிவிருத்திக்காக இதுவரை செய்யப்பட்டுள்ள முதலீடு தொடர்பாக சந்தேகத்தை வெளியிட்டுள்ளது. ஏஎஸ்எல் இன் பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் இவ்விடயம் 2022 செப்தெம்பர் மாதத்தின் போது வரிசை அமைச்சின் செயலாளர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவ்வாறான மேலும் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டுக்காக தீர்வு கொண்டு வருவதற்காகும். | |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதி ”பீ” – தொலையியக்கி ஏற்றுமிடம் மற்றும் நடையோடுபாதையின் நிர்மாணப் பணிகள் 2017 ஏப்ரல் 25 இல் தொடங்கி 2019 ஒக்தோபர் 24 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், நிர்மாணப் பணிகள் 2022 சனவரி 26 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனவே, செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவை உரிய காலத்தில் அடைந்துகொள்ள முடியவில்லை. | பொதி - பீ இன் நிர்மாணப் பணிகள் 2017 ஏப்ரல் 25 இல் தொடங்கி 2019 ஒக்தோபர் 24 இல் பூர்த்தி செய்யப்படவிருந்தது. வலிதான காரணங்களுக்காக ஆலோசகரால் பின்வரும் கால நீடிப்பு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 29 வரையான கால நீடிப்பு.<br><br>2022 சனவரி 26 இல் வேலை பூர்த்தி செய்யப்பட்டதுடன் இணங்கப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து ஜப்பான் யென் 106,937,376.00 மற்றும் இலங்கை ரூபா 410,768,933.00 தொகைக்கான தாமதக் கட்டணங்களை அறவிட்டது. BoQ இன் ஒவ்வொரு பணிப் பிரிவையும் வெற்றிகரமாக பூர்த்திசெய்த பின்னர் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் கையேற்கப்பட்டு உரிய ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில், பணிகள் பூர்த்தியடைந்தவுடன் எந்தவொரு பணி நிறைவேற்றுச் சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>அதற்குப் பதிலாக, ஆலோசகர் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் அனைத்து குறைபாடுகளையும் கவனித்து, அனைத்து ஒப்பந்தக் கடமைகளையும் நிறைவேற்றிய | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பலனை அடைந்து கொள்வதற்கு செயற்திட்ட தாமதங்களை குறைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் செயலாற்றல் சான்றிதழை வழங்குவார். | |
| (ஆ) | **பொதி ஏ - பயணிகள் முனையக் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்.**<br><br>மேற்படி நிர்மாணப் பணிகள் ஜப்பான் ஒப்பந்ததாரருக்கு 2020 மார்ச் 04 இல் வழங்கப்பட்டு 2020 மார்ச் 12 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் செயலாற்றல் பிணை 2020 மார்ச் 25 இல் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2020 மார்ச் 12 இல் ஒப்பந்தம் கையொப்பமிட்ட பின்னர் 09 மாத தாமதத்துடன் ஒப்பந்தப் பணிகள் 2020 திசெம்பர் 15 இல் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், ஒப்பந்ததாரரின் செயலாக்கத் திட்டத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்த முன்னேற்றம் 30 சதவீதமாக இருக்க வேண்டும். ஆனால், ஒப்பந்தத்தின் உண்மையான முன்னேற்றம் 5.38 சதவீதம் மாத்திரமே ஆகும். முகாமைத்துவ கருத்துரையின் பிரகாரம் கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் உலகளாவிய பயணக் கட்டுப்பாடு என்பன குறைந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாகும். | பொதி ஏ ஒப்பந்தம் ரெய்சீ கோப்பரேஷனிற்கு (ரீசீ) இற்கு 2020 மார்ச் 04 இல் வழங்கப்பட்டதுடன் 2020 மார்ச் 12 இல் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் ரீசீ செயலாற்றல் பிணைமுறியை 2020 மார்ச் 25 இல் சமர்ப்பித்தது.<br><br>பின்வரும் காரணங்களால் ஒப்பந்தம் தொடங்குவது 2020 திசெம்பர் 15 வரை தாமதமானது.<br>(அ) அந்த நேரத்தில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் உலகளாவிய பயணக் கட்டுப்பாடு காரணமாக ஒப்பந்ததாரரின் வெளிநாட்டு பதவியணியினரை அணிதிரட்ட இயலாமை.<br><br>(ஆ) இலங்கை அரசாங்கம் 2020 மார்ச் 15 முதல் 2020 ஏப்ரல் 20 வரை முழுமையான பூட்டுதலை அறிவித்தது, மேலும் நிர்மாணத் தள நடவடிக்கைகள் உட்பட ஒன்றுகூடல் மற்றும் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியது. அங்கே பகுதியளவு பூட்டுதல்கள், பகுதி தனிமைப்படுத்தல்கள், பயணக் கட்டுப்பாடுகள், தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவுகள் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்தல் போன்றன இருந்தன.<br><br>(இ) 2020 திசெம்பர் 15 இற்கு முன்னர் பணியைத் தொடங்குவதற்கான அறிவுறுத்தல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த இடத்தில் தொடர்ச்சியான தடையின்றிய நிர்மாணப் பணிகளுக்கு நாட்டில் நிலவும் தொற்றுநோய் சூழ்நிலையில் எந்த உத்தரவாதமும் இல்லை. | நாளாந்த வேலை மற்றும் வளங்கள் ஒதுக்கீட்டுத் திட்டம் மதிப்பாய்வு செய்யப்பட்டு, செய்யப்படும் உண்மையான வேலை மற்றும் வளங்கள் ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், மாதாந்த முன்னேற்றத்தில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் ஒப்பந்தத்தின் திட்டமிடப்பட்ட முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | (ஈ) ஒப்பந்ததாரர் 2020 ஒக்தோபர் 07 இல் முற்பண கொடுப்பனவு உத்தரவாதத்தை வழங்குகிறார், இது ஆலோசகர் மூலம் பணியைத் தொடங்க அறிவுறுத்துவதற்கான முற் தேவைப்பாடாகும். | |
| | (உ) எனினும், நிலத்தடி ஆய்வுகள், மண் ஆய்வு மற்றும் இடிப்பு ஆய்வுகள் போன்ற பூர்வாங்க பணிகளை 2020 திசெம்பர் 15 இற்கு முன்னர் மேற்கொள்ள ஒப்பந்ததாரர் அனுமதிக்கப்பட்டார். | |
| (இ) கம்பனியின் முறைமைகள் மற்றும் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நிறுவன வள திட்டமிடல் முறைமை (ஈஆர்பி) ஏஏஎஸ்எல் இற்காக அமுல்ப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது, அதன் பிரகாரம் நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமை தொகுதிகளை அமுல்ப்படுத்துவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை 2019 ஆகஸ்ட் 15 இல் ஏஏஎஸ்எல் மற்றும் ஐஎவ்எஸ் றிசேஜ் டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றுக்கு இடையே ஐ.அ.டொலர் 530,571 (வற் தவிர) மற்றும் ரூபா 38,900,544 (வற் தவிர) மொத்த கிரயத்தில் கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்த உடன்படிக்கை 2020 நவம்பர் 15 அன்று கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து பதினைந்து (15) மாதங்களுக்குள் ஒப்பந்த காலப்பகுதி பூர்த்தியடைகிறது. பின்னர், முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு காலநீடிப்பொன்று வழங்கப்பட்டது. எனினும், | பின்வரும் காரணங்களால் செயற்திட்டம் தாமதமானது.<br><br>(i) வழிநடாத்தல் குழுவுடன் இதனை கலந்துரையாடாமல் சபைக்கு தவறான ஜீஏபி ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.<br>(ii) கொவிட்<br>(iii) GI-Live இற்கு பின்னர் தீர்வு வழங்கப்படுகிறது. | செயற்திட்டம் திட்டமிட்டவாறு பெரிய காலதாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் முடிவடைந்த போதிலும், 2023 மார்ச் 25 இல் உள்ளவாறு இறுதி ஏற்றுக்கொள்ளல் சான்றிதழை வழங்குவதன் மூலம் நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) முறைமை தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 25 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட கொடுப்பனவு ஐ.அ.டொலர் 427,109 மற்றும் இலங்கை ரூபா 14,704,405 (வற் உடன்) ஆகும். | | |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பீஜஏ இல் ஏற்றுமிடம் - ஏ இற்கான எல்ஈடி பிரகாசமான விளக்கை பொருத்துதல்கள் மற்றும் இடிமின்னல் கட்டுப்பாட்டு முறைமையை வழங்கி, சோதனை செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.** (மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 23 மில்லியன்.) | | |
| (i) | ஆரம்ப பிரீஎஸ் இன் பிரகாரம் இந்த பெறுகையை 2018 சனவரி 3 இல் தொடங்கி 2018 ஏப்ரல் 24 இல் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், பிரீஎஸ் ஐ இரண்டு முறை திருத்திய பின்னர் 2019 ஒக்தோபர் 28 இல் பெறுகை பூர்த்திசெய்யப்பட்டது. ஆரம்ப பிரீஎஸ் உடன் ஒப்பிடும் போது, இந்த பெறுகைக்கு எடுக்கப்பட்ட காலம் ஏறத்தாழ 1 வருடம் மற்றும் 9 மாதங்கள் ஆகும். | விடயக் கோவையின் பக்க இல. 10 இல் இணைக்கப்பட்ட பிரீஎஸ் இன் அடிப்படையில். ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வரை கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதி உண்மையானதாகும். எனினும், பெறுகை நடைமுறைகளை தொடங்கிய பின்னர், ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வரை செயன்முறையை பூர்த்தி செய்வதற்கு 13 மாதங்கள் எடுத்தது. | பிரீஎஸ் இற்கு இணங்க பெறுகை பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (ii) | பெறுகை செயன்முறையின் தாமதத்தின் விளைவாக, பெறுகையின் மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆம். பயனர் பிரிவு மூலம். பயனர் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பிஆர் ஐ ரூபா 23 | பெறுகை செயன்முறையின் போது முறையான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 23 மில்லியனிலிருந்து (ஆரம்ப மதிப்பீட்டு கிரயம்) பெறுகை பூர்த்தியடையும் போது ரூபா 26.9 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | மில்லியனிற்கு அதிகரித்திருந்த போதிலும் விவரக்குறிப்புக்கள் அவற்றின் உண்மையான தேவைப்பாட்டைக் கண்டறிந்த பின்னர் 2018.08.28 இல் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பெறுகை செயன்முறை தொடங்கப்பட்டது. | நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பெறுகை தொடர்பான மேலதிக கிரயத்தை குறைக்க வேண்டும். |
| (ஆ) | **பீஜஏ இல் 50kW மற்றும் 25kW கிரிட் ரை இன்வெஸ்ரேர்ஸ் வழங்குதல்.** (மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3 மில்லியன்.) | | |
| (i) | ஆரம்ப பிரீஎஸ் இன் பிரகாரம் இந்த பெறுகை 2019 யூலை 25 இல் தொடங்கி 2019 ஒக்தோபர் 19 இல் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டது. பெறுகை செயன்முறை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் 2022 மே 27 ஆம் திகதிய ரீசீ அறிக்கையை கருத்தில் கொண்டு பெறுகையை இரத்து செய்வதற்கு கேள்வி சபை இல. 02 இற்கு தெரிவித்திருந்தது. இந்த பெறுகை இரத்து செய்யப்பட்ட போது ஏறத்தாழ மூன்று வருட காலப்பகுதி எடுக்கப்பட்டது அவதானிக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்காமல், தேவையில்லாமல் கோவைகளை வைத்திருந்து அடுத்த கட்டத்தை குறிப்பிடுதல், கோவைகளை ஒப்படைப்பதில் தாமதங்கள் மற்றும் முன் பெறுகைக்கான தயாரிப்பு இல்லாதமை என்பவற்றால் தாமதம் ஏற்பட்டது. | பக்கம் 2-அ இல் உள்ள இந்த ஆரம்ப பிரீஎஸ் இல் (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) இந்த பெறுகை 2019.05.14 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது. கொவிட்-19 காரணமாக விலை தளம்பல், ஒத்திவைப்பு, இரத்து செய்தல் என்பன ஏற்பட்டது. | பெறுகை செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு முன்னர் பிரீஎஸ் இற்கிணங்க பெறுகை பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (ii) | மேற்படி இரத்துசெய்தல் காரணமாக பின்வரும் நட்டங்கள்/ தாமதங்கள் ஏற்படக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.<br>• எதிர்பார்த்தவாறு சூரியசக்தி மின்சார உற்பத்தியால் மின்சாரச் செலவினங்களை குறைக்க முடியாதிருந்தது.<br>• புதிய பெறுகை கிரயம் அதிகரிக்கலாம்<br>• இந்த பெறுகை இரத்து செய்யப்பட்டதால், தேவைப்பாடுகள் ஒத்திவைக்கப்பட | இணங்கப்பட்டது, இது சார்ந்துள்ளது. ஆனால் தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏஎஎஸ்எல் இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. | தாமதமின்றி கொள்வனவு செய்வதன் மூலம் எதிர்பார்த்த விளைவு அடைந்து கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தது பெறுகை நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் காலம் சிக்கனமற்றவையாகும். | | |
| (இ) | **கேபிள் கவசமிடப்பட்ட (Armoured) 4 பிரதானி - CU/XLPE/SWA/PVC – ஆர்எம்ஏ இல் வழங்குதல்** (மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6.03 மில்லியன்.) | | |
| | பெறுகை கோவையில் சேர்க்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் 2021 திசெம்பர் 16 இல் கொள்வனவு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு, 2023 பெப்ரவரி 03 இல் பொருட்கள் களஞ்சியத்திற்கு பெறப்பட்டன. பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் 04 மாதங்களில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இந்த பெறுகைக்காக எடுக்கப்பட்ட காலம் ஏறத்தாழ 13 மாதங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்காமல், தேவையில்லாமல் கோவைகளை வைத்திருந்து அடுத்த கட்டத்தை குறிப்பிடுதல், கோவைகளை ஒப்படைப்பதில் தாமதங்கள் மற்றும் முன் பெறுகைக்கான தயாரிப்பு இல்லாதமை என்பன தாமதத்திற்கு காரணமாகின்றன. | உண்மையானது, (2021-12-21 இல் எஸ்சீஎம் பிரிவால் பிஆர் பெறப்பட்டதுடன் ஜீஆர்என் திகதி 2023-02-16) | பிரீஎஸ் இற்கிணங்க பெறுகை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | **ஆர்எம்ஏ இல் கேபிள் கவசமிடப்பட்ட 4 பிரதானியை (120 SQ.mm) வழங்குதல்.** (மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 4.15 மில்லியனாகும்) | | |
| (i) | 2021 திசெம்பர் 28 இல் பெறுகை கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு, 2023 பெப்ரவரி 03 இல் பொருட்கள் களஞ்சியத்திற்கு பெறப்பட்ட போதிலும் இந்த பெறுகைக்காக எடுக்கப்பட்ட காலம் 13 மாதங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம் இது 3 மாதங்களில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டது. நடவடிக்கை எடுக்காமல், தேவையில்லாமல் கோவைகளை வைத்திருந்து அடுத்த கட்டத்தை குறிப்பிடுதல், கோவைகளை ஒப்படைப்பதில் தாமதங்கள் மற்றும் முன் | உண்மையானது, (2021-12-28 இல் எஸ்சீஎம் பிரிவால் பிஆர் பெறப்பட்டதுடன் ஜீஆர்என் திகதி 2023-02-16). | பிரீஎஸ் இற்கிணங்க பெறுகை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைக்கான தயாரிப்பு இல்லாதமை என்பன தாமதத்திற்கு காரணமாகின்றன. | | |
| (ii) | பெறுகை செயன்முறையின் தாமதத்தின் விளைவாக, பெறுகையின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4.15 மில்லியனிலிருந்து (ஆரம்ப மதிப்பீட்டு கிரயம்) பெறுகை பூர்த்திசெய்யப்பட்ட போது ரூபா 5.01 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | மாறுபடும். எதிர்வுகூற முடியாது. | பெறுகை செயன்முறையின் போது முறையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பெறுகை தொடர்பான மேலதிக கிரயம் குறைக்கப்பட வேண்டும். |
| (iii) | பெறுகை வழிகாட்டல்கள் 2006 பொருட்கள் மற்றும் வேலைகளின் பந்தி இல. 4.2.3 நிலை 2 (இ) இன் பிரகாரம் பிரீஎஸ் உடன்பட்டவுடன், பிசீ மற்றும் ரீஈசீ ஆகியன பிஈ உடன் கலந்தாலோசித்து முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும். ஒரு பெரிய தாமதம் ஏற்பட்டால், தாமதத்திற்கான காரணங்களை விளக்குவது, விளைவு திருத்த நடவடிக்கைகள் மற்றும் என்பிஏ ஐ தெரிவிப்பது பிசீ இன் பொறுப்பாகும். எனினும், மேற்படி பெறுகை நடவடிக்கைகளில் பாரிய தாமதங்கள் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆனால், தேவையற்ற காலதாமதத்தை குறைப்பதற்கு பெறுகைக் குழு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | கொவிட்-19 சூழ்நிலையால் எதிர்பாராத தாமதங்கள் ஏற்பட்டன, இது உலகளவில் பாதிக்கப்பட்டதால் எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. பெறுகை தாமதங்களை விரைவுபடுத்தும் வகையில், பெறுகை விடயங்களை ஆய்வு செய்வதற்கும், பெறுகை தாமதங்கள் குறித்த ஆலோசனைகளை வழங்குவதற்கும் பெறுகைக் குழுவை நாங்கள் நியமித்துள்ளோம். | தேவையற்ற காலதாமதத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பது பெறுகைக் குழுவின் பொறுப்பாகும். |
| (iv) | பெறுகை வழிகாட்டல்கள் 2006 பொருட்கள் மற்றும் வேலைகளின் 1.2.1(அ) மற்றும் (ஈ) பந்தியின் பிரகாரம் பெறுகையின் போது சிக்கனம், காலக்கெடு மற்றும் தரம் ஆகியவற்றை அதிகப்படுத்துவதை பெறுகை செயன்முறை உறுதிப்படுத்த வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளின் பணிகள் மற்றும் விநியோகத்தின் உயர் தரம் மற்றும் விரைவான நிறைவேற்றலுடன் சேர்த்து குறைவான கிரயத்தை விளைவித்தது. எனினும், மேற்படி விடயங்களை கொள்வனவு செயன்முறை உறுதிப்படுத்தப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக, அனைத்து அரசாங்க/ தனியார் துறை கம்பனிகளும் தங்களது நாளாந்த நடவடிக்கைகளை மாத்திரமே பேணுவதற்கு தங்கள் வணிகத் திட்டம், நிர்வாகப் பணித் திட்டத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. | பெறுகை செயன்முறையின் போது சிக்கனம், காலக்கெடு மற்றும் தரம் ஆகியவற்றை அதிகப்படுத்துவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |